# அண்ணா அறிவியல் மையம் – கோளரங்கம் திருச்சிராப்பள்ளி.
## எண்ணிலக்கக் கோளரங்க நிகழ்ச்சி
## பேரண்டம்

அண்ணா அறிவியல் மையம் – கோளரங்கத்தின் முற்றிலும் புதிய எண்ணிலக்கக் கோளரங்க நிகழ்ச்சியான **“பேரண்டம்”** நம்மை மெய்நிகர் விண்வெளி சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்கிறது. நமது பேரண்டத்தின் எண்ணிலடங்கா கண்கவர் வான் பொருள்கள் பற்றிய ஆழ்ந்த அறிவைப்பெற முயல்கிறோம்.



எண்ணிலக்கக் கோளரங்க நிகழ்ச்சியின் நோக்கம், விண்வெளியில் உள்ள பொருட்களின் தன்மை பற்றிய அறிவை வழங்குவதாகும். கோளரங்க நிகழ்ச்சியானது, வானியல் கருவிகளின் வருகைக்கு முன்னதான காலத்தின், நமது முன்னோர்களின், அறிவியல் பூர்வமற்ற நம்பிக்கைகளிலிருந்து தொடங்குகிறது.

இப்போதெல்லாம் அனைத்தும் வேறுமாதிரியாக ஆகிவிட்டன! நாம் நவீன கால மக்களாக இருக்கிறோம். வானம், சமன்பாடுகளாலும், தொழில்நுட்பக் குறியீடுகளாலும் நிரப்பப்பட்டுள்ளது.

பேரண்டம் மிகவும் பழமையானது என்பதை நாம் நன்கு அறிவோம். மேலும் பேரண்டம் மிகப் பெரியதும் கூட. அதன் பிரம்மாண்டத்தைக் காண்கையில், மனித குல செயல்கள் ஒரு பொருட்டே இல்லை, எனத் தோன்றும் அளவுக்குப் பெரியது.

கோளரங்க நிகழ்ச்சியில் நாம் பார்க்கப் போவது பேரண்டத்தைப் பற்றிய மனித ஆய்வுகளின் முடிவுகள். அறிவியல் பூர்வமற்ற நம்பிக்கைகள் அல்ல. அறிவியலை அதன் தூய வடிவில் காணவுள்ளோம்.



இந்த நிகழ்ச்சி, நாம் வாழும் பேரண்டத்தின் அளவையும், நமது பூமிக்கோளின் இடத்தையும், விளையாட்டுத்தனமான விளக்கப்படங்களுடன் புரிந்துகொள்ள வைக்கிறது.


நமது பால்வெளி அண்டம், பேரண்டத்தில் தனியாக இருக்கவில்லை. தொலைவில் மற்ற அண்டங்களும் உள்ளன.

நாம் கண்டறிந்துள்ள இந்த பேரண்டத்தில் சுமார் லட்சம் கோடி விண்மீன் திரள்கள் இருப்பதாக மதிப்பிடுகிறோம். கோளரங்க நிகழ்ச்சி, விண்மீன் மையத்தில் உள்ள கருந்துளைகள், அவற்றின் தன்மை, விண்மீன்கள், விண்மீன் கூட்டங்கள் மற்றும் விண்மீன் வெடிப்புகள் ஆகியவை பற்றி விளக்குகிறது.



வேறு பல விண்மீன்களை, சுற்றிவரும் தொலைதூர உலகங்கள் பற்றியும் அறிய முடிகிறது. அவை ராட்சச வாயுப்பெருங்கோள்களாக இருக்கலாம், வியாழனை விடப் பல மடங்கு பெரியவையாக, அற்புதமான வளையங்களால் அலங்கரிக்கப்பட்டவையாகக் கூட அவை இருக்கலாம். அல்லது, ஒரே நேரத்தில் இரண்டு சூரியனைச் சுற்றி வரும் பாறைக் கோள்களாவும் அவை இருக்கலாம்.

பனிக்கட்டி பந்துகளான வால் விண்மீன்கள், வளையங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள கோள்கள், வளையங்களின் தன்மைகள் ஆகியவை பற்றிய கண்கவர் விளக்கத்துடன் துவங்கி, நிகழ்ச்சி நம்மை, நமது சூரிய குடும்பத்திற்கே மறுபடியும் அழைத்து வருகிறது.




நமக்குப் பிடித்த நம் வீட்டில் ... நமது சூரியனின் ஈர்ப்புக் கரங்களில், மற்ற கோள்களுடன் சேர்ந்து நூறு கோடி ஆண்டுகளாக, அதன் ஒளியில் நாம் மூழ்கி இன்புற்றிருக்கிறோம்.

நாம், நம் சூரியக் குடும்ப பேரண்டத்தின் மிகச்சிறு நுண்ணிய பகுதி என்பதையும், பேரண்டமும் நம்மில் ஒரு பகுதியேயாகும் என்பதையும், நிகழ்ச்சி நமக்கு புரிய வைக்கிறது. நாம் அனைவரும் பேரண்டத்தின் குழந்தைகளே என்பதை ஆழ்ந்து உணர வைக்கின்றது.

அண்ணா அறிவியல் மையம் கோளரங்கத்திற்கு வருகை தாருங்கள். முற்றிலும் புதிய எண்ணிலக்க கோளரங்க நிகழ்ச்சியை கண்டுகளியுங்கள்.

**நவீன எண்ணிலக்கக் கோளரங்க நிகழ்ச்சியான “பேரண்டம்” காண அன்புடன் அழைக்கின்றோம்.**

## ANNA SCIENCE CENTRE – PLANETARIUM, TIRUCHIRAPPALLI
## - DIGITAL 4K PLANETARIUM SHOW –
## UNIVERSE



The new digital planetarium show titled 'Universe' at Anna Science Centre - Planetarium takes us on an immersive virtual tour to space. Our Universe contains countless spectacular celestial objects about which we started gaining deeper knowledge.

The objective of this show is to impart some knowledge on the nature of the objects in space. The show starts with the narration on the misconceptions, our ancestors had before the advent of the astronomical tools.

Now-a-days everything is different! We are the people of modern times. Theoreticians started modelling the Universe and hence the sky has filled up with equations and technical symbols.

We know very well that the universe is very old and that the universe is very large, too. So large that human affairs seem insignificant next to it.



What we see in this show is the result of human studies of the universe. No superstitions but science in its purest form.


The show makes us to understand, the size of the Universe we live-in and the place of our existence-our planet Earth, with playful illustrations.

Our Galaxy is the home of about 50000 crore stars. And the entire solar system hovers in it like a tiny speck of dust in the morning fog. Completely lost. Our Galaxy is not alone in the universe. There are other galaxies further away.



We estimate there are about lakhs of crores of galaxies in the observable universe. The show explains about the blackholes in the galactic centre, nature of the blackholes in space, stars, star clusters and about star explosions

The show also tells us about extrasolar planets that is planetary system orbiting several other stars. They might be gas giants, many times bigger than Jupiter, decorated by amazing rings. Or rocky planets orbiting around two suns at the same time!



With some more spectacular illustrations on Comets, ringed planets, natures of the ring systems and many more, the show brings us back to our own Solar System.

In our beloved home... In the gravitational arms of our Sun, we've been basking in its light along with the other planets for hundreds of crores of years.

The show makes us understand that we are just negligible part of the universe and the universe is part of us, too. In the deepest sense, we are all children of the cosmos.

Come, witness the all new digital immersive planetarium show 'Universe' in Anna Science Centre - Planetarium, Tiruchirappalli.

**We welcome you all to the modern - digital 4k planetarium show 'UNIVERSE'**